மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDARM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

Double-Blind Peer-Reviewed | Open Access

E-ISSN: 3049-3676 (ONLINE)

Bimonthly | Online Publication | Tamil Language

Published: 23.08.2026

Volume 9 | Issue 9 | July – August 2026

# Nature Description in Malaipadukadam

**Research Scholar H.Nancy Kirba**

**Part-Time Ph.D.Research Scholar, Department of Tamil,**

**Dr. M.G.R. University, Chennai – 95.**

**Email: nancymerlin1986@gmail.com Mobile: 9994183033**

**Research Supervisor Dr. R. Sharmila**

**Assistant Professor & Head, Department of Tamil,**

**Dr. M.G.R. Educational and Research Institute, Maduravoyal, Chennai – 95.**

**Email: sharmila.tamil@drmgrdu.ac.in Mobile**: 9566067955

**Abstract**

Malaipadukadam one of the poems included in the *Pattuppāṭṭu* anthology, stands as an outstanding example of nature description in Sangam literature. Written by Perunkunrur Perunkausikanar, this work vividly portrays the natural wealth of the mountainous region, including rain, waterfalls, forests, flowers, birds, animals, and human life through lively and artistic imagery. This study examines the various aspects of nature depicted in *Malaipadukadam*. The clouds embracing the mountain peaks, thunderous rainfall, waterfalls flowing through rocky paths, fragrant flowers, the humming of bees, and the chirping of birds beautifully reveal the greatness and splendour of nature. The study also explains how the lives of animals such as elephants and deer in the hill country, along with the harmonious lifestyle of people living in close relationship with nature, are deeply reflected in the poem. Natural elements such as rain, forests, waterfalls, and mountain paths are presented not merely as background settings, but as living elements closely connected with human emotions and everyday life. Through this, *Malaipadukadam* is understood not only as a literary work describing natural beauty, but also as an important Sangam text that highlights the inseparable relationship between human beings and nature.

Keywords: Karumegath Thoothu- Kaanam's music life - Natural life - The bowing cave - Mountain path - Nature and human life - The waterfall's display

# மலைபடுகடாமில் இயற்கை வருணனை

**ஆய்வாளர் க . நான்சி கிருபா.**

**பகுதிநேரமுனைவர் பட்டஆய்வாளர்,தமிழ்த்துறை,**

**டாக்டர்.எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகம்,சென்னை 95.**

**nancymerlin1986@gmail.com அலைபேசி- 9994183033**

**நெறியாளர் முனைவர்.இரா.ஷர்மிளா.**

**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறைத்தலைவர்.**

**டாக்டர்.எம்.ஜி.ஆர்.கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,**

**மதுரவாயில், சென்னை-95.**

sharmila.tamil@drmgrdu.ac.in **அலைபேசி- 9566067955**

## ஆய்வுச் சுருக்கம்

பத்துப்பாட்டில் இடம்பெறும் மலைபடுகடாம் நூல் இயற்கை வருணனைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் இயற்றிய இந்நூல், மலைநாட்டின் இயற்கை வளம், மழை, அருவி, காடு, மலர்கள், பறவைகள், விலங்குகள் மற்றும் மனித வாழ்க்கை ஆகிய அனைத்தையும் உயிரோட்டமிக்கக் காட்சிநயத்துடன் சித்தரித்து விவரிக்கிறது.

இவ்வாய்வில் மலைபடுகடாம் நூல் இடம்பெறும் இயற்கை வருணனைகள் பல்வேறு கோணங்களில் ஆராயப்பட்டுள்ளன. மலைச்சிகரங்களைத் தழுவும் மேகங்கள், இடியுடன் கூடிய மழை, பாறைகளின் நடுவில் பாயும் அருவிகள், மணங்கமழும் மலர்கள், ரீங்காரமிடும் தேனீக்களின், பறவைகளின் கீச்சொலிகள் போன்றவை இயற்கையின் மேன்மையை வெளிப்படுத்துகின்றன. மேலும், மலைநாட்டில் வாழும் யானை, மான் போன்ற விலங்குகளின் வாழ்க்கையும், மனிதர்கள் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்த வாழ்க்கை முறையும் இந்நூல் ஆழமாகப் பிரதிபலிக்கப்படுகின்றது என்பதும் ஆய்வில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மழை, காடு, அருவி, மலைவழி போன்ற இயற்கைக் கூறுகள் வெறும் பின்னணியாக மட்டுமின்றி மனித உணர்வுகளோடும் வாழ்க்கையோடும் இணைந்த

உயிர்மிக்கக் கூறுகளாக அமைகின்றன என்பதும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம், ***மலைபடுகடாம்*** இயற்கை அழகை மட்டும் வருணிக்கும் நூலாக அல்லாது, மனிதனும் இயற்கையும் ஒன்றிணைந்த வாழ்வியல் முறையை எடுத்துக்காட்டும் சிறந்த இலக்கியமாகத் திகழ்கிறது என்பதே இவ்வாய்வின் மையக் கருத்தாகும்.

## திறவுச் சொற்கள்:

கருமேகத் தூது- கானத்தின் இசை வாழ்க்கை - இயற்கை வாழ்க்கை- குன்றும் குகையும் - மலைவழி- இயற்கையும் மனித வாழ்க்கையும்- அருவியின் அரங்கேற்றம்.

## முன்னுரை

தமிழ் மொழியின் தொன்மையையும் தமிழர் நாகரிகத்தின் உயர்வையும் உலகறியச் செய்யும் அரிய இலக்கியச் செல்வங்களாகச் சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. காலத்தின் கரங்களைத் தாண்டியும் கருத்தின் செழுமையால் இன்று வரை உயிர்ப்புடன் நிலைத்திருக்கும் இலக்கியங்களால், தமிழரின் வாழ்க்கை முறையும் பண்பாட்டையும் இயற்கையோடு இயைந்த வாழ்வியலையும் ஆழமாக எடுத்துரைக்கின்றன. சங்ககாலத் தமிழர்கள் இயற்கையை வெறும் சூழலாகக் கருதவில்லை; உயிரின் உடன்பிறப்பாகவும் உணர்வின் மொழியாகவும் கருதி அதனோடு ஒன்றிணைந்து வாழ்ந்தனர். மலை, காடு, ஆறு, அருவி, மழை, பறவை, விலங்கு என இயற்கையின் ஒவ்வொரு கூறும் உணர்வியலோடும் வாழ்வியலோடும் பின்னிப் பிணைந்திருந்தது.

மலைபடுகடாம் இயற்கை வருணனையின் உச்சநிலையை வெளிப்படுத்தும் தனிச்சிறப்புமிக்க நூலாகத் திகழ்கிறது. இந்நூலைப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் இயற்றியுள்ளார்.

மலைநாட்டின் இயற்கை வளம், அங்குள்ள மக்களின் வாழ்க்கை முறை, விலங்குகள், பறவைகள், மழை, அருவி, காடு ஆகிய அனைத்தையும் உயிரோட்டமிக்கக் காட்சிநயத்துடன் எடுத்துரைக்கும் இந்நூல், சங்க இலக்கியங்களில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது.

மலைபடுகடாம் முழுவதும் இயற்கை ஓர் உயிருள்ள உலகமாக காட்டுகிறது. மலைச்சிகரங்களைத் தழுவும் மேகங்கள், பாறைகளைக் கிழித்துப் பாயும் அருவிகள், மணங்கமழும் மலர்கள்,ரீங்காரமிடும் தேனீக்களின், பறவைகளின் கீச்சொலிகள், யானைகளின் முழக்கங்கள் ஆகிய அனைத்தும் கண்முன் காட்சியளிக்கின்றன.

**“தீயின் அன்ன ஒண்செங் காந்தள்**
**தூவல் கலித்த புதுமுகை ஊன்செத்து”**

**மலைபடுகடாம்** (145–146)

மலைநாட்டில் மலர்ந்திருக்கும் செங்காந்தள் மலர்கள் தீப்பொறியைப் போல ஒளிவீசுக்கிறது. மழைத்துளிகள் படர்ந்த மலர்கள் புதிதாக மலர்ந்த முகம்போலப் புத்துணர்ச்சியுடனும் பசுமையுடனும் காட்சியளிக்கின்றன. இயற்கையை உயிருள்ள அனுபவமாக மாற்றும் கற்பனைநயம் சிறப்பாக வெளிப்படுகிறது.

## மலைமகளின் மலரும் இயற்கை வளம்

மலைநாட்டின் இயற்கை வளத்தை உயிரோட்டமிக்கக் ஓவியமாக மலைபடுகடாம் காட்டுகிறது. வானத்தைத் தழுவும் மலைச்சிகரங்கள் மேகங்களோடு கலந்துகொண்டு, அவை கருணைமழையாக உருகி மலைநாட்டைச் செழிப்பாக்குகின்றன.

**“திருமழை தலைஇய விருணிற விசும்பின்**
**விண்ணதிர் இமிழிசை கடுப்பப் பண்ணமைத்து”**

**மலைபடுகடாம்**(1–2)

கருமேகங்கள் சூழ்ந்த வானில் இடியொலி முழங்க, மழை பொழியும் காட்சி ஓர் இசைக் கச்சேரிபோல் சித்தரிக்கப்படுகிறது. இடியின் அதிர்வும் மழைத்துளிகளின் ஒலியும் மலைகளில் எதிரொலித்து இயற்கை இசையாக மாறுகின்றன. மழை பொழிந்து மலையின்மேல் தேங்கிய நீர் பாறைகளின் இடைவெளிகளில் வழிந்தோடி வெண்திரைகளாய் அருவிகளாக உருமாறுகிறது.

**“ஆற்றின் அளவும், அசையும் நல் புலமும்,**

**வீற்று வளம் சுரக்கும் அவன் நாடு படு வல்சியும் ,**

**மலையும்,சோலையும்,மா புகல் கானமும் “**

**மலைபடுகடாம் (67–69)**

மலையிலிருந்து வேகமாகப் பாயும் நீரின் இயக்கம் கண்முன் காட்சியாக விரிகிறது. பாறைகளைத் தட்டி முழங்கும் அருவிகளின் ஓசை மலைநாட்டின் இயற்கை இசையாக மாறுகிறது.

மழையால் செழித்த காடுகள் பலவகை மலர்களால் மணங்கமழுகின்றன.

**“ கேளினி வேளைநீ முன்னிய திசையே**

**மிகுவளம் பழுநிய யாணர் வைப்பிற்**

**– மலைபடுகடாம் (94-95)**

மலர்களால் நிறைந்த காடுகளையும் அவற்றின் குளிர்ந்த நிழலையும் நம் கண்முன் நிறுத்துகின்றன. மலைநாடு வெறும் நிலப்பரப்பாக அல்லாது உயிரோட்டமிக்கதாய்ச் சித்தரிக்கப்படுகிறது.

## கருமேகத் தூது

மலைநாட்டின் உயிர்நாடியாக விளங்குவது மழை ஆகும். கருமேகங்கள் மலைச்சிகரங்களைத் தழுவி வந்து கருணைத்துளிகளாக உருகும் போது, மலைநாடு முழுவதும் புதுப் பசுமையால் பொலிவுறுகிறது.

**“கனிபொழி கானங் கிளையொ டுணீஇய**

**துனைபறை நிவக்கும் புள்ளின மானப் “**

**— மலைபடுகடாம் (54-55)**

கனமழை பொழிந்து, செழித்து நிற்கும் மலைநாட்டு காடுகளின் வளத்தை எடுத்துரைக்கின்றன. மழை இயற்கைக்கு உயிரூட்டும் சக்தியாகச் சித்தரிக்கப்படுகிறது. மழைநீரால் பெருக்கெடுத்த அருவிகள் பாறைகளைக் கடந்து வேகமாகப் பாயும் காட்சியும் கவிஞரின் சொல்லாட்சியில் உயிர் பெறுகிறது.

**“பாடி னருவிப் பயங்கெழு மீமிசைக்**

**"காடுகாத் துறையுங்கானவருளரே”**

**– மலைபடுகடாம் (278–279)**

இடைவிடாமல் பாயும் அருவிகளும் அவற்றைச் சூழ்ந்த பழமரச் சோலைகளும் இயற்கையின் செழிப்பை வெளிப்படுத்துகின்றன.

மழை பொழிந்த பின் மலையகம் புத்துயிர் பெறுகிறது. பாறைகள் குளிர்ச்சி பெறுகின்றன; காடுகள் மணங்கமழுகின்றன; பறவைகள் இனிமையாகக் குரலிடுகின்றன. இயற்கையின் ஒவ்வொரு அசைவும் கற்பனையில் இசையாக உருமாறுகிறது.

## கானத்தின் இசை வாழ்க்கை

மலைபடுகடாம் மலைநாட்டின் இயற்கை வளத்தை மட்டும் அல்லாது, அங்கு வாழும் உயிரினங்களின் வாழ்க்கையையும் உயிர்த்துடிப்போடு எடுத்துரைக்கிறது. அடர்ந்த காடுகள் பசுமைத்

திரையாக விரிந்திட, அவற்றின் மடியில் எண்ணற்ற உயிர்கள் சுதந்திரத்தின் இசையில் திளைக்கின்றன.

**“ வெறிக்களம் கடுக்கும் வியல் அறைதோறும்**

**மண் இல் கமழும் மா மலைச் சாரல்**

**தேனினர், கிழங்கினர்,ஊன் ஆர் வட்டியர்”**

**மலைபடுகடாம் (150–152)**

தேனீக்களின் ரீங்காரம் யாழிசையைப் போல இனிமையாக ஒலிப்பதாகப் புலவர் கூறுகிறார். இயற்கையின் ஒவ்வொரு ஒலியும் இசையாக மாறும் காட்சி நயம் சிறப்பாக வெளிப்படுகிறது.மலர்களைச் சுற்றி மிதக்கும் தேனீக்களின் ஓசை கானத்தின் அமைதியை இனிமையாக்குகிறது.

**“ மண் இல் கமழும் மா மலைச்சாரல்,**

**தேனினர் , கிழங்கினர் , ஊன் ஆர் வட்டியர்,**

**சிறு கண் பன்றிப் பழுதுளி போக்கி”**

**மலைபடுகடாம்(151-153)**

தேன் நிரம்பிய மரங்களையும் அவற்றைச் சுற்றி ரீங்காரமிடும் தேனீக்களையும் உயிரோட்டத்துடன் வருணிக்கின்றன. மலைநாட்டின் பறவைகளும் இயற்கை இசையை மேலும் இனிமையாக்குகின்றன.

பறவைகளின் கீச்சொலி நிறைந்த வளமான இயற்கைச் சூழலைக் இவ்வடிகளில் காட்சியளிக்கிறது. இயற்கையின் ஒவ்வொரு ஒலியும் மலைநாட்டை இசை காட்டுகின்றது.

## விலங்குகளின் இயற்கை வாழ்க்கை

மலைபடுகடாம் மலைநாட்டில் வாழும் விலங்குகளின் இயற்கை வாழ்க்கையையும் கலைநயத்துடன் சித்தரிக்கிறது.

யானைகள் கூட்டமாகச் சென்று காட்டின் அமைதியை இடியென உடைத்து முழங்குகின்றது.

**“அகல் அமலை இறும்பில் துவன்றிய யானைப்**

**பகல் நிலை தளர்க்கும் கவண் உமிழ் கடுங் கல்**

**இரு வெதிர் ஈர்ங் கழை தத்தி, கல்லெனக்”**

**மலைபடுகடாம்(205-207)**

யானைகள் சுதந்திரமாகச் சஞ்சரிக்கும் இயற்கை உலகத்தை எடுத்துக்காட்டுகின்றன. மலைநாடு மனிதர்களுக்கே உரியது அல்ல; விலங்குகளும் அதனோடு ஒன்றிணைந்து வாழும் உயிர்மிக்க உலகமாகக் காட்டப்படுகிறது. மான்கள் பசுமைப் புல்வெளிகளில் இலகுவாகத் தாவிச் செல்லும் காட்சியும் கற்பனைநயத்துடன் விரிகிறது.

**“மான் தோற் சிறு பறை கறங்கக் கல்லென,**

**வான் தோய் மீமிசை அயரும் குரவை;**

**நல் எழில் நெடுந்தேர் இயவு வந்தன்ன,**

**கல் யாறு ஒலிக்கும் விடர் முழங்கு இரங்கு இசை;”**

**— மலைபடுகடாம்(321-324)**

மான்களின் மென்மையான இயல்பும் அவற்றின் அமைதியான அசைவுகளும் இயற்கையின் அழகை மேலும் இனிமையாக்குகின்றன.

மான்களின் மென்மையான நடையையும் அவற்றின் இயற்கை வாழ்க்கையையும் உயிரோட்டமிக்கக் காட்சியாக வெளிப்படுத்துகின்றன.

## குன்றும் குகையும் கூறும் மலைவழி

மலைபடுகடாம் மலைநாட்டின் மலைவழிகளையும் அவற்றின் அழகையும் சித்தரிக்கிறது. உயர்ந்து நிமிர்ந்த மலைச்சிகரங்கள், ஆழ்ந்த பள்ளங்கள், அடர்ந்த காடுகள் அனைத்தும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து இயற்கையின் அற்புத உலகமாக விளங்குகின்றன.

**" கடும் பறைக்கோடியர் மகாஅர் அன்ன**

**நெடுங் கழைக் கொம்பர்,மகாஅர் அன்ன**

**நெடுங் கழைக் கொம்பர் ,கடுவன் உகளினும்;**

**நேர் கொள் நெடு வரை, நேமியின் தொடுத்த,"**

**மலைபடுகடாம் (236-237)**

மலைப்பாதைகளின் கடினத்தன்மையையும் பயணிகளின் அச்ச உணர்வையும் வெளிப்படுத்துகின்றது. மலைவழிகள் வெறும் பயணப்பாதைகளாக மட்டுமல்லாது இயற்கையின் வலிமையை உணர்த்தும் அனுபவ பாதைகளாகவும் காட்டப்படுகின்றது. அடர்ந்த காடுகள் சூழ்ந்த மலைவழிகள் இயற்கையின் இரகசிய உலகத்தை நினைவூட்டுகின்றன.

மலைப்பாதைகளில் எதிரொலிக்கும் இயற்கை ஒலிகள் பயணிகளின் மனதில் வியப்பை ஏற்படுத்துகின்றன. இயற்கை தன் சொந்த உலகமாக மலைநாடு காட்சியளிக்கிறது.இன்றைய பயண இலக்கியத்தை மழைபடுகடாம் அன்றே விவரித்து காட்டியுள்ளதும் தெளிவாகும்.

## அருவியின் அரங்கேற்றம்

மலைபடுகடாம் முழுவதும் அருவிகள் துடிப்பும் அழகும் நிறைந்த இயற்கை ஓவியங்களாக வர்ணிக்கப்படுகின்றன.மழைநீரால்

பெருக்கெடுத்த அருவிகள் பாறைகளைத் தட்டி வெண்திரைகளாய் பாய்கின்றன.

**“கலை தொடு பெரும் பழம் புண் கூர்ந்து ஊறலின்**

**மலை முழுதும் கமழும் மாதிரம் தோறும்”**

**மலைபடுகடாம்(292-293)**

மலையிலிருந்து வேகமாகப் பாயும் நீரின் இயக்கம் உயிரோட்டத்துடன் வெளிப்படுகிறது. பாறைகளின் இடைவெளிகளில் பாயும் அருவிகள் மலைநாட்டின் அழகை மேலும் உயர்த்துகின்றன. அருவிகளின் முழக்கத்தோடு பறவைகளின் குரலும் கலந்து இயற்கையின் இசையை மேலும் இனிமையாக்குகின்றன.

**“ஒலி கழைத் தட்டை புடையுர், புனந்தொறும்**

**கிளி கடி மகளிர் விளி அப்டி பூசல்;”**

**– மலைபடுகடாம்(228-229)**

பறவைகளின் இனிய கீச்சொலி நிறைந்த இயற்கைச் சூழலை வெளிப்படுத்துகின்றன. மழை பொழிந்து செழித்த காடுகள் மலர்களால் மணங்கமழும் உலகமாக மாறுகின்றன.

**“நறுங்காழ் கொன்று கோட்டின் வித்திய**

**குறுங்கதிர்த் தோரை”**

**– மலைபடுகடாம்(157–158)**

மலைநாட்டின் தாவர வளத்தையும் இயற்கையின் செழிப்பையும் நுணுக்கமாக எடுத்துரைக்கின்றன.

## இயற்கையும் மனித வாழ்க்கையும்

மலைபடுகடாம் இயற்கையை மட்டும் வருணிப்பதில்லை; மனித வாழ்க்கையும் இயற்கையும் பிரிக்க முடியாத உறவில்

இருந்ததை ஆழமாக எடுத்துரைக்கிறது. மலைநாட்டில் வாழ்ந்த மக்கள் வேட்டை ஆடுதல், தேன் சேகரித்தல், காட்டு வளங்களை நம்பி வாழ்தல் போன்றவற்றின் மூலம் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்தனர்.

**“ கோவலர் குறவரோடு ஒருங்கு இயைந்து ஆர்ப்ப**

**வள் இதழ்க் குளவியும் குறிஞ்சியும் குழைய**

**நல் ஏறு பொரூஉம் கல்லென் கம்பலை;”**

— **மலைபடுகடாம்** (332-335)

மலைநாட்டு மக்களின் வாழ்க்கை இயற்கையோடு ஒன்றிணைந்திருந்ததை எடுத்துரைக்கின்றன. மலைபடுகடாம் காட்டும் மலைநாடு, மனித வாழ்வும் இயற்கைச் சூழலும் ஒன்றோடொன்று இணைந்த உலகமாகப் படைக்கப்பட்டுள்ளது.இயற்கையின் ஒவ்வொரு அசைவும் மனித மன உணர்வுகளோடு இணைந்து காணப்படுகிறது. மழை மகிழ்ச்சியை அளிக்கிறது; அருவி இசையை உருவாக்குகிறது; மலர்கள் புத்துணர்ச்சியை ஏற்படுத்துகின்றன; விலங்குகள் இயற்கையின் உயிர்மையை வெளிப்படுத்துகின்றன.

## முடிவுரை

சங்க இலக்கியத் திரளில் ஒளிரும் மலைபடுகடாம், மலைநாட்டின் இயற்கை வருணனையை வெறும் காட்சிப்படுத்தலாக அல்லாது, உணர்வூட்டும் ஓர் உயிர்மிகு அனுபவமாக நமக்குள் பதிக்கிறது. மலை, மேகம், மழை, அருவி, காடு, மலர்கள், பறவைகள், விலங்குகள் ஆகிய அனைத்தும் ஒன்றோடொன்று இணைந்து இயற்கையின் ஒற்றுமைச் சங்கீதமாக ஒலிக்கின்றன.

இந்நூலில் இயற்கை வெறும் பின்னணியாக அல்லாது மனித வாழ்க்கையோடு ஒன்றிணைந்த உயிருள்ள உலகமாகக்

காட்டப்படுகிறது. மழை பெய்யும் போது மலைநாடு புத்துயிர் பெறுகிறது; அருவிகள் இசைபாடுகின்றன; தேனீக்கள் யாழிசையைப் போல ஒத்த சத்தமிடுகின்றன. பறவைகள் கீச்சொலியால் இயற்கையை உயிர்ப்பிக்கின்றன. மனிதனும் இயற்கையும் பிரிக்க முடியாத உறவில் வாழ்ந்த சங்ககால வாழ்க்கை முறையை இந்நூல் ஆழமாக எடுத்துரைக்கிறது.

மேலும், இயற்கையின் ஒவ்வொரு அசைவையும் நுண்ணுணர்வோடு கவனித்துக் கவிதை வடிவில் உயிர்ப்பித்து நிறுத்தும் திறமையே மலைபடுகடாமின் பெருமையாகும். இயற்கை, இசை, உணர்வு, மனித வாழ்வு ஆகியவை ஒன்றோடொன்று சங்கமித்து ஓர் உயிர்மிகு இலக்கிய உலகத்தை உருவாக்குகின்றன.

எனவே, மலைபடுகடாம் இயற்கை வருணனையின் சிறந்த முன்னுதாரணமாக மட்டுமல்லாது, மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ வேண்டியதன் அவசியத்தையும் உணர்த்தும் காலத்தால் அழியாத சங்க இலக்கியக் காவியமாகத் திகழ்கிறது. இயற்கையின் அழகை ரசிக்கத் தூண்டும் இந்நூல், அதை நேசித்துப் பாதுகாக்கும் பொறுப்பையும் நமக்கு நினைவூட்டுகிறது.

## <u>அடிக்குறிப்பு:-</u>

1. ப-80 - ப.சரவணன்-மலைபடுகடாம்,

2. ப-57 - ப.சரவணன்-மலைபடுகடாம்,

3. ப-69 - ப.சரவணன்-மலைபடுகடாம்,

4. ப-73 - ப.சரவணன்-மலைபடுகடாம்,

5. ப-67 - ப.சரவணன்-மலைபடுகடாம்,

6. ப-99 - ப.சரவணன்-மலைபடுகடாம்,

7. ப-80 - ப.சரவணன்-மலைபடுகடாம்,

8. ப-80 - ப.சரவணன்-மலைபடுகடாம்,

9. ப-89 - ப.சரவணன்-மலைபடுகடாம்,

10. ப-109 - ப.சரவணன்-மலைபடுகடாம்,

11. ப-92- - ப.சரவணன்-மலைபடுகடாம்,

12. ப-100 - ப.சரவணன்-மலைபடுகடாம்,

13. ப-91 - ப.சரவணன்-மலைபடுகடாம்,

14. ப-80 - ப.சரவணன்-மலைபடுகடாம்,

15. ப-106 - ப.சரவணன்-மலைபடுகடாம்,

## உசாத்துணை நூல்கள்

1.பத்துப்பாட்டு ஆராய்ச்சி, டாக்டர். மா. இராசமாணிக்கனார், சாரதா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு – 2023.

2.மலைபடுகடாம், ப.சரவணன். தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு,சென்னை , முதல் பதிப்பு – 2022.

3. சங்க இலக்கியம், கா. சுப்பிரமணிய பிள்ளை, மணிவாசகர் பதிப்பகம்,
சென்னை, முதல் பதிப்பு – 1965.

4. தமிழர் பண்பாடும் சங்க இலக்கியமும், ந. சுப்புரெட்டியார், நியூ செஞ்சுரி
புக் ஹவுஸ், சென்னை, முதல் பதிப்பு – 1978.

5. தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்ட சங்க இலக்கிய ஆய்வு நூல்கள், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், முதல் பதிப்பு – 1985.